DEPOSITION OF WITNESS

(Chapter XVII BNSS)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous **CC.No. 300/2021**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

| | | |
|---|---|---|
| Name | : | முருகன் (P.w.11) |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 06th day of April 2026

(1வது எதிரி ஆஜர் இல்லை. 1ம் எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது) 2வது எதிரி ஆஜர் )

**முதல் விசாரணை :–**

நான் தற்போது குருந்தகுளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 5 வருடத்திற்கு முன்பு கொன்னக்குளம் பேருந்து நிறுத்தம்அருகே நானும் எனது அண்ணன் மகன் ராமசாமியும் காலை 9மணியளவில் நின்று கொண்டிருந்தபோது மானாமதுரை காவல் நிலைய ஆய்வாளர் அவர்கள் என்னையும் ராமசாமியையும் திருட்டு வழக்கில் சம்பந்தப்பட்ட நபரை விசாரிக்க இருப்பதால் காவல் நிலையத்திற்கு எங்களை வரச்சொன்னார்கள். நாங்கள் காலை 9.30மணியளவில் காவல் நிலையம் சென்றோம்.அப்போது ஆஜர் எதிரி காவல் நிலையத்தில் இருந்தார். ஆஜர் எதிரி செயினை திருடியதை ஒப்புக் கொண்டு தானாக முன்வந்து ஒப்புதல்

வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் சொத்துக்களை அத்தாட்சியில் கைப்பற்றினார்கள். அந்த வழக்கில் உள்ள ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் நாங்கள் இருவரும் கையொப்பம் செய்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எ.த.கு.வி –**

இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல, விசாரித்தார்கள். போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றாலும் வழக்கிற்காக விசாரித்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் நான் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான்.

**மறு விசாரணை –**

**இல்லை**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.